1972 மார்ச் 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தாமதமாக வந்தார்கள். நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். ஆகவேதான் கேட்டு முடித்த கேள்வியை மீண்டும் கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முழுவதற்கும் பெருமை என்று கருதுகிறேன்.

Siddha Dispensaries

* 576 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that more Siddha Dispensaries will be opened by temples in the State shortly; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: விவரமான அறிக்கை @ ஒன்று பேரவையின் முன் வைக்கப்படுகிறது.

புலவர் சி. பழனிச்சாமி: நல்ல புகழ்பெற்ற சித்த மருத்துவர்கள் பழனி நகரிலே இருக்கிறார்கள். வெளிமாநிலங்களிலிருந்து எல்லாம் வந்து அங்கே மருத்துவம் செய்துகொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட புகழ்பெற்ற சித்த மருத்துவர்களை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ள ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்படி சித்த மருத்துவத்திலே தனிச்சிறப்புடைய மருந்துகள் எதுவாக இருந்தாலும் அவை உலகத்திற்கு அறிவிக்கப்படுமானால், சித்த மருத்துவத்திற்காக உள்ள இந்திய மருத்துவத் துறைக்கு அறிவிக்கப் படுமானால் அப்படிப்பட்ட சிறப்புள்ள மருந்து விவரங்களை பி.ஐ.எம். படிப்பவர்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யலாம். ஆனால் பெரும்பாலும் உண்மை அறிவிக்கப்படாத காரணத்தினால், அருமையான மருந்துகள்கூட உலகத்திற்குத் தெரிவதில்லை.

திரு நா. வீராசாமி: இங்கே ஒரு நீண்ட பட்டியல் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆலயங்கள் இப்படிப்பட்ட மருத்துவ மனைகளை

@ 155–157-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

வைக்கவேண்டும் என்றால், எந்த அடிப்படையிலே வருவாய் இருக்க வேண்டுமென்று ஏதாவது விதி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஒரு லட்சத்திற்கும் அதிகமான அளவில் வருமானம் வரக்கூடிய ஆலயங்கள் எவையாக இருந்தாலும் கூடுமானவரையில் சித்த மருத்துவமனை ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏனென்றால் பி.ஐ.எம். மருத்துவத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் நியமிக்கப்படுவதற்கும் மற்ற செலவுகளுக்கும் ஏறத்தாழ 10 ஆயிரம் ரூபாயும், ஆறாயிரம் ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரையில் மருத்துவச் செலவுகளுக்காகவும் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே 14 ஆலயங்களில் திறந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு 5 ஆலயங்களிலே திறந்திருக்கிறார்கள். மேலும் 20, 25 ஆலயங்களிலே திறக்கவேண்டுமென்ற வேண்டுகோள் இருக்கிறது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, சித்த மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? தேவஸ்தானங்கள் நன்கொடை கொடுத்தால் செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவைகள் எவ்வளவு நன்கொடை கொடுக்க வேண்டும்? இந்த நிறுவனங்கள் தயாராக இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சித்த மருத்துவக் கல்லூரி ஏற்கெனவே பாளையங்கோட்டையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சென்னையிலே ஏற்படுத்த வேண்டுமானால் அதற்குத் தேவையான நிதியைத் தர ஆலயங்கள் முன்வருமானால் அதை அரசாங்கம் ஆலோசிக்கும். இதைப்போன்றே ஆயுர்வேதம், யுனானி ஆகியவற்றிற்கும் கல்லூரி வேண்டுமென்று கூறுகிறார்கள். 5 லட்சம் ரூபாய் நிதி தந்தால் மீதியை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு மூன்று துறைகளுக்கும் கல்லூரிகள் அமைக்க முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அரசாங்கம் தன்னுடைய செலவிலேயே மாவட்ட ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடல்களில் சித்த மருத்துவப் பிரிவை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏற்கெனவே 5, 6 மருத்துவ மனைகளிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு மேலும் 5, 6 இடங்களிலே சித்த மருத்துவம் விரிவுபடுத்தப்படும்.

சென்னை அரசுப் பொது மருத்துவ மனை

*577 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அரசாங்க பொது மருத்துவ மனையினை மேலும் விரிவு படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எந்தெந்த வகையில் சென்னை அரசாங்க பொது மருத்துவமனை விரிவுபடுத்தப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னை பொது மருத்துவமனை தலைமை மருத்துவமனையில் சில பகுதிகள் ஏற்கெனவே உயர்த்தப் பட்டிருக்கின்றன. உயர்த்தப்படுவதும் விரிவுபடுத்தப்படுவதும் ஒன்றுதான். "நியூராலஜி, கார்டியாலஜி" பகுதிகளுக்காக ஏற்கெனவே பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப் பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு கேன்ஸர், லெப்ரஸி, டி.பி. பெட்ஸ் அமைப்பதற்காக 4 லட்ச ரூபாய் செலவில் வார்டுகள், கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதைத்தவிர, சென்ட்ரல் ஜெயில் பகுதியிலிருந்து ஒரு பகுதியை எடுத்துச் கொள்ளலாமா என்ற ஆலோசனை இருந்தது. ஆனுல் அது முழு அளவுக்குச் செம்மையாக நிறைவேறுமா என்ற ஐயப்பாடு இருந்த காரணத்தினுல், இந்த விரிவுத் திட்டம் இப்பொழுது கைவிடப் பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : சார், அரசாங்கப் பொது மருத்துவ மனையிலே பிரிவுகளை விரிவுப்படுத்துவதற்கான ஆலோசனைகளைப் பற்றித்தான் அமைச்சர் அவர்கள் சொன்னதாகக் கருதுகிறேன் அங்கே தினசரி நோயாளிகள் படுக்கை அல்லாமல் கீழே படுத்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்களுடைய பிரச்னையைப் போக்க படுக்கைகளை அதிகப்படுத்துவதற்குச் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.